

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு 26.08.2025 அன்று திருச்சிராப்பள்ளி, அண்ணா விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படும் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து, விளையாட்டு வீரர்களிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி சேஷத்ரிமயும் தீபி சானு, மாவட்ட நகர் ஊரமைப்புக்குழு உறுப்பினர் க.வைரமணி, மாவட்ட விளையாட்டு அலுவலர் நிருமதி.ஞான சுகந்தி, மண்டல முதுநிலை மேலாளர் செந்தில்குமார், விளையாட்டு விடுதியின் மேலாளர் கண்ணன், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டம் தோனிமடுவு பகுதியில் தடுப்பணை கட்டுவது தொடர்பாக வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாஜலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், வன அலுவலர் குமிலி வெங்கட் அப்பாலா நாயுடு, நீர்வளத்துறை செயற்பொறியாளர் ரவி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### அரியலூர் மாவட்டத்தில் – மாவட்ட அளவிலான

# தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஆக. 29 –

அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அரியலூர் மாவட்டத்தின் சார்பாக 2025ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டை விளையாட்டில் முதன்மையான மாநிலமாக உருவாக்குவதுடன் தனி நபர்களுக்கு விளையாட்டுகளை முழு திறனுடன் அணுகவும் அவர்கள் உயர் மட்ட போட்டிகளில் பங்குபெற்று சிறப்படையவும் வாய்ப்புகளை தமழ்நாடு அரசு வழங்குகிறது. மேலும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலனின் மேம்பாட்டில் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டு பல்வேறு திட்டங் களுக்கு தொடர்ந்து நிதி உதவிகளையும் வழங்கி வருகிறது. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன் முதல மைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கு இணையாக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் வெகு சிறப்பாக நடத்தப்படுகிறது. அந்த வகையில் இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்ததாவது:

மாணவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதை போலவே விளையாட்டுப் போட்டிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்கள் ஏனென்றால் உடல்நலனை பாதுகாப்பதில் விளையாட்டு போட்டிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி வெவ்வேறு புதிய விளையாட்டுப்போட்டிகள் சேர்க்கப்பட்டு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையானது மிக முக்கியமான துறைகளுள் ஒன்றாக விளங்குகிறது. சர்வதேச அளவிலான சதுரங்கப் போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்திட அனுமதி வழங்கப்பட்டு அவை சிறப்பாக திட்டமிடப்பட்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்க ப்பட்டது. விளையாட்டு வீரர்கள் மாநில அளவில், தேசிய அளவில் மற்றும் உலக அளவிலான விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று வெற்றிப்பெறவேண்டும். அதன் மூலம் வேலைவாய்ப்புகளை பெறவேண்டும் என்பதற்காக தமிழ்நாடு அரசு சார்பில் பல்வேறு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ஹாக்கி விளையாட்டில் சிறந்த மாவட்டமாக அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கம் திகழ்கிறது. இந்திய ஹாக்கி அணியில் இடம் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த ஹாக்கி வீரர் கார்த்திக் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரியலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிந்த போது அவரது இல்லத்திற்கே சென்று வீடு வழங்குவதற்கான ஆணையை வழங்கினார்.

இதேபோன்று சென்னையைச் சேர்ந்த கேரம் விளையாட்டு வீராங்கனை வெளிநாட்டில் நடைபெறும் போட்டியில் குடும்ப பொருளாதார சூழல் காரணமாக கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்ட போது தமிழ்நாடு அரசு சார்பில் அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு அவர் வெளிநாட்டிற்கு சென்று கேரம் போட்டியில் வெற்றிபெற்று நாடு திரும்பினர். உடனடியாக கேரம் விளையாட்டு வீராங்கனைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.1 கோடி நிதியுதவி வழங்கி வாழ்த்து தெரிவித்தார். எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் விளையாட்டு ஆர்வத்தினை வளர்த்து கொள்ளவேண்டும். போட்டிகளில் வெற்றி கிடைக்க வில்லை என்றால் அதனை அடுத்தப் போட்டிக்கு பயிற்சியாக எடுத்துக் கொள்ள வேண்டும். வீரர், வீராங்கனைகள் முயற்சி யும், பயிற்சியும் பெற்று, வெற்றிப் பெற வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

மேலும், மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3,000ம், இரண்டாம் பரிசாக ரூ.2,000ம், மூன்றாம் பரிசாக ரூ.1,000ம் பரிசுத் தொகையாக வழங்கப்படும். மாநில அளவில் தனிநபர் போட்டியில் பெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.75,000ம், மூன்றாம் பரிசாக ரூ.50,000ம் வழங்கப்படும். குழுப்போட்டிகளில் பங்குபெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75,000ம், இரண்டாம் பரிசாக தலா ரூ.50,000ம், மூன்றாம் பரிசாக தலா ரூ.25,000ம் பரிசாக வழங்கப்பட உள்ளது. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் இவ்வாண்டுக்கான தனிநபர் மற்றும் குழுப்போட்டிகளுக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.37 கோடி வழங்கப்படுகின்றது. போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சலுகைகளும் பெற இயலும். இது தவிர கடந்த ஆண்டு 83 வீரர், வீராங்கனைகளுக்கு சர்வதேச, தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டு வீரர்களுக்கு தகுதி அடிப்படையில் அரசு துறைகளில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு உள்ளது.

விளையாட்டுப்போட்டிகள் அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் மட்டுமல்லாமல் பல்வேறு இடங்களில் இன்று முதல் துவங்கி வருகின்ற 12.09.2025 வரை நடைபெற உள்ளது. இந்த ஆண்டு மாவட்டம் முழுவதிலும் இருந்து 12 வயது முதல் 19 வயது வரை உள்ள பள்ளி மாணாக்கர்களும், 17 வயது முதல் 25 வயது வரை கல்லூரி மாணாக்கர்களும், 15 வயது முதல் 35 வயது வரை பொதுபிரிவினர், அனைத்து வயது மாற்றுத் திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் என 53,881 வீரர்கள் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருங்கால இந்தியாவின் விளையாட்டின் தலைநகரமாக தமிழ்நாடு திகழும் வகையில் பல்வேறு பன்னாட்டு அளவிலான போட்டிகள், தேசிய அளவிலான போட்டிகள், முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள், விளையாட்டு வீரர்களுக்கான உயரிய ஊக்க தொகை போன்ற திட்டங்கள் சீரிய முயற்சியால் நடத்தி வருவது விளையாட்டு வீரர்களிடையே நம்பிக்கை மற்றும் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கியுள்ளது. முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் மாணாக்கர்கள் பங்குபெற்று தங்கள் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி பரிசு தொகை மற்றும் பதக்கம் பெறவும், மாவட்ட அளவில் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் வருகின்ற அக்டோபர் மாதத்தில் நடைபெற உள்ள மாநில அளவிலான போட்டியில் பங்கேற்று அதிக அளவிலான பதக்கங்களை வென்று அரியலூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப் படுகிறது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், ஜெயங்கொண்டம் நகர்மன்ற தலைவர் சுமதி சிவக்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்(பொ) பாலசுப்ரமணியம், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தராஜ், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் லெனின், மாணவ, மாணவிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அரியலூர் மாவட்டத்தின் சார்பாக 2025ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி மற்றும் பலர் உள்ளனர்.

### முதல்வரின்

# திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தை வெற்றிபெறச் செய்வோம்!

## பாளையில் நடந்த கருத்தரங்கில் – கவிஞர் பேரா பேச்சு!

சென்னை, ஆக.29 -

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக திருக்குறள் திருப்பணிகள் திட்டக் கருத்தரங்கம் பாளையங்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சித் துறை மூலமாக தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் முதல் கருத்தரங்கம் பாளையங்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் தமிழ் வளர்ச்சித்துறையின் நெல்லை மண்டிலத் துணை இயக்குநர் வ.சுந்தர் தலைமையில் நடைபெற்றது.



திருக்குறள் இரா.முருகன் வரவேற்புரை வழங்கினார்.

பொதிகைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கவிஞர் பேரா என்ற பே.இராஜேந்திரன் இந்தத் திட்டத்தின் நோக்கங்கள் குறித்து விரிவாக பேசினார்.

அவர் பேசுகையில்

“கடந்த 2024-ஆம் ஆண்டு டிசம்பர் 31-அன்று கன்னியாகுமரியில் நடந்த திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியின்போது தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் திருவள்ளுவத்தை கொண்டு போய் சேர்க்கும்விதமாக திருக்குறள் திருப்பணிகள் திட்டம் தமிழ் வளர்ச்சித் துறை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் என தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

அதன்படி அரசாணை வெளியிடப்பட்டு இத்திட்டம் தற்போது செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

இத்திட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, திருக்குறள் பயிற்சிகளை வழங்க மூன்று குழுக்கள் தேர்ந்தெடுத்து ஒரு குழு மூலம் 30-வாரங்கள் என மூன்று குழுக்கள் மூலமாக 90-வாரங்களில் திருக்குறள் பயிற்சி வகுப்புகளும் பயிலரங்குகளும் நடத்தப்படவுள்ளது.

அதன்படி அமைக்கப்பட்டுள்ள ஒரு குழுவிற்கு நானே தலைவராக இருந்து 30-வாரங்களுக்கு பயிற்சி வகுப்பு மற்றும் பயிலரங்குகளை நடத்தவுள்ளேன்.

இதற்கென மூன்று பயிற்றுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வாரத்தோறும் நடைபெறும் இந்நிகழ்வுகளில் மாணவ மாணவிகளும், இளைஞர்களும், பொதுமக்களும் கலந்துகொள்ள வேண்டும் .முதல்வரின் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் வெற்றிபெறச் செய்வோம்”

...என பேசினார்.

தொடர்ந்து பயிற்றுநர்கள் சிவ.செல்வமாரிமுத்து,வனசெல்வி ஆகியோர் திருக்குறள் கருத்துரை வழங்கினர்.

ஆசிரியை பொன்ரேகா வாழ்த்துரை வழங்கினார்.

நிறைவாக தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் கனகலட்சுமி நன்றி கூறினார்.

கருத்தரங்கில் வரலாற்று ஆய்வாளர் திவான், முனைவர்வை.இராமசாமி,கவிஞர் காயல் அருள்,கவிஞர் முத்துக்குமார்,சேவாலயா சங்கிலி பூதத்தான்,நல்பூமி மாரியப்பன், கோதை மாறன், லெனின் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில், கரூர், தான்தோன்றிமலை கல்யாண வெங்கட்ரமணசாமி பெருமாள் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு பாலாலய நிகழ்ச்சி நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி செந்தில் பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், பங்கேற்றனர். இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகர்ப்புற அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூரில் மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார். உடன் ஓசூர் மாநகர மேயர் சத்யா, துணை மேயர் ஆனந்தய்யா , மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் மாதேஸ்வரன், தொ.மு.ச. கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.